



# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## 2025-26ஆம் கல்வியாண்டு

## முதலாமாண்டு மாணவர்களுக்கான ஒரு வார கால அறிமுகப் பயிற்சித் திட்டம்

30.06.2025 - 07.07.2025 இடம் : கலை அரங்கம்.

**எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல்.**










முதலாமாண்டு மாணவர்களுக்கான ஒருவார கால அறிமுகப்பயிற்சித் திட்டம் (30.06.2025 - 07.07.2025)










| M.V.Muthiah Government Arts College for Women, Dindigul | | | | | |
|---|---|---|---|---|---|
| One Week Orientation Programme 30.06.2025 - 07.07.25 | | | | | |
| | **09.30 am - 10.30 am** | **10.30 am - 12.00 noon** | **12.00 - 12.30 pm** | **12.30 - 01-30. pm** | **01.30 pm- 02.00 pm** |
| Day 1 | Inaugral Session and Special Address **Thiru S.Saravanan IAS District Collector Dindigul District** | Motivational Session **Dr.K.Naganandhini Asoociate Professor and Head, Department of Tamil** | Lunch | Ice Breaking and Interactive Session **Dr.K.M.Sumathi** Asoociate Professor and Head, Department of English **Dr.Rajarajeswar**i Associate Professor and Head, Department of Business Administration | Campus Tour |
| Day 2 | Motivational speech **Nicholas Francis Director CAN HR Madurai.** | Introducing the Administrative Structure, Departments and Programmes **Dr. Sathyabama Asoociate Professor and Head, Department of Zoology** | | Curriculum Examination and Evaluation pattern **Dr.Rajarajeswari Asoociate Professor and Head, Department of Business Administration** | Video on Departmental activities |
| Day 3 | Government Schemes Benefiting Students (Puthumai penn, BC/MBC/SC/ST Scholarship etc.)Video **Ms. P.VijayaRani District Social Welfare Officer, Dindigil** | Government Schemes Benefiting Students (Puthumai penn, BC/MBC/SC/ST Scholarship etc.) **Mr.Jeganathan District Social Welfare Officer, Dindigil** | | Student Support Systems (Hostels/Cooperative Stores/Canteen/Xeroxing facilities, Girls Resting room, First Aid support, etc.) **Dr. I. Rajeshwari Asoociate Professor and Head, Department of Computer Sciednce** | Commitees and roles **Dr.K.M.Sumathi Associate Professor and Head. Department of English** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Day 4 | Students Safety drive & Societal Responsibilities - Resouse Person Police offtctal SP/ASP<br>**D.Murugan**<br>**Deputy Superintendent of Police Prohibition Enforcement,**<br>**Dindigul M.V.Palanichamy B.A Town Traffic Police Station Dindigul .** | Career Guidance & Placement<br>**Ms. Prabavathy**<br>**District Employment Officer, Dindigul** | Lunch | Anti Ragging , Anti Sexual harassment, ICC, Anti drug awareness(Videos)<br>**Dr.P.Senthi Ilango Assistant Professor Department of Zoology** | Grievane Redressal System<br>**Ms.J.Sukaya**<br>**Assistant Professor, Department of Computer Science** |
| Day 5 | Human Rights<br>**S.GokilaSanthiya B.Sc., LL.B., Advocate, High Court, Madurai** | Health and Hygine, Student Well being<br>**Dr.Kamala Pshycologist Ramana Hospital, Dindigul** | | Naan Muthalvan Skill Development Program<br>**Mr.Vasan Babu**<br>**Tamilnadu Skill Development Cedntre Dindigul** | Interactive session with Alumni (Virtual / Direct)<br>**Advocate Kamatchi** |
| Day 6 | Psychological Counselling (Expert Counsellor)<br>**Mrs.G.Jansi Rani**<br>**Centre Administrator,**<br>**Social Welfare and Women Empowerment, Dindigul** | Personality Development<br>**Dr.S.Angelin**<br>**Principal(Retired)**<br>**Government Arts College. Kodaikanal** | | Extension activities & Service Cells / Clubs (NCC, NSS, YRC, RRC, Enviro. club, SSL, Women Development Cell, Entrepreneurial Cell, Student Counselling Cell, Science Forum, Fine Arts, Departmental Clubs, etc.) **Dr.V,Rajalakshmi Asoociate Professor and Head, Department of Economics** | Student feedback |

**Programme Co-ordinator**
Dr.S.KRISHNAVENI
Associate Professor
Department of Computer Science




**எம் வி முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி திண்டுக்கல்**

**முதல் நாள் (30-6-2025)**

திண்டுக்கல் எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரியில் கல்லூரி-கல்வி ஆணையர் மற்றும் உயர்கல்வித்துறை வழிகாட்டுதலின்படி 2025 - 2026 ஆம் கல்வி ஆண்டில் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு ஒரு வார கால அறிமுகப் பயிற்சி விழா நடைபெற்றது. 30-6-2025 அன்று மாவட்ட ஆட்சியர் உயர்திரு சரவணன் IAS சிறப்பு விருந்தினராக பங்கு கொண்டார்.





முதல் நாள் முதல் நிகழ்வாக கல்லூரி முதல்வர் முனைவர். க.லட்சுமி அவர்கள் மாணவர்களை உற்சாகப்படுத்தி தன்னம்பிக்கை விடாமுயற்சி மற்றும் சமயோசித புத்தியுடன் செயல்பட வேண்டும் என வாழ்த்தி வரவேற்புரை ஆற்றினார்.







சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மாவட்ட ஆட்சியர் உயர்திரு சரவணன் IAS தனது உரையில் மாணவியர் பொறுப்புணர்வுடன் நடந்து சமூக பங்களிப்பை செய்வதற்கான அனைத்து தகுதிகளையும் பெறவேண்டும் என்றும் தங்களது தனிப்பட்ட திறமைகளையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கூறினார். குறிப்பாக அரசு வழங்கும் புதுமைப்பெண் மற்றும் நான்முதல்வன் திட்டம் குறித்து சிறப்பாக விளக்கினார்.

மாணவியர்கள் இவ்விழாவில் தங்கள் பெற்றோருடன் பங்கு கொண்டனர். கல்லூரி கல்வி வாழ்வில் அடியெடுத்து வைத்துள்ள மாணவியருக்கு தமிழ்த் துறைத்தலைவர் முனைவர் க.நாகநந்தனி அவர்கள் உற்சாக உரையாற்றினார்.




இந்நிகழ்ச்சியின் இரண்டாவது நிகழ்வாக மாணவர்கள் தங்களை தனியாக அறிமுகப்படுத்திக் கொள்ள அறிமுக வகுப்பு மேலும் ஐஸ் பிரேக்கிங் (ICE BREAKING) என்ற பயிற்சி மூலம் அவர்களின் இருக்க சூழ்நிலையைப் போக்கி அவர்களுக்குள் ஒரு பிணைப்பை உருவாக்க பயிற்சியும் அளிக்கப்பட்டது. இறுதியில் கணினி அறிவியல் துறைத்தலைவர் முனைவர் ஐ.ராஜேஸ்வரி அவர்கள் நன்றியுரை ஆற்றினார். மாணவியர்கள் இன்றைய நாளின் நினைவாக சுயபடம் எடுப்பதற்கான முனையில் நின்று படம் எடுத்துக் கொண்டனர்.









கல்லூரி முதல்வர் முதலாமாண்டு மாணவியர்களுக்கு ரோஜா மலர் மற்றும் இனிப்பு வழங்கி வரவேற்றார். இன்று முதல் ஆறு நாட்கள் மாணவியர்களுக்கு அரசு திட்டங்களான நான்முதல்வன், புதுமைப்பெண் திட்டம், மற்றும் குழு அமைப்புகளான போதை தடுப்பு, நாட்டு நலப்பணி, விளையாட்டு, உடற்பயிற்சி, செஞ்சிலுவைச்சங்கம் போன்றவை குறித்த விழிப்புணர்வும், ஒவ்வொரு நாளும் துறை நிபுணர்களைக் கொண்டு கல்வி, சட்டம், சுகாதாரம், சைபர் கிரைம் மற்றும் தலைமைப் பண்புகள் ஆகிய தலைப்பில் உரைகள் நிகழ்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சி மாணவியர்களுக்கு கல்லூரி சூழல் குறித்த ஓர் அறிமுக விழாவாகும். இந்த ஒரு வார கால அறிமுக பயிற்சியினை IQAC ஒருங்கினைப்பாளர் கணினி அறிவியல் துறையின் இணைப்பேராசிரியர் முனைவர்.சீ.கிருஷ்ணவேணி அவர்கள் ஒருங்கிணைக்க உள்ளார்.

# M.V.MUTHIAH
## GOVERNMENT ARTS COLLEGE FOR WOMEN
Affiliated To Mother Teresa Women's University, Kodaikanal
Re-accredited with 'A+' Grade by NAAC, Dindigul - 624001, Tamilnadu.

## INDUCTION PROGRAMME
## IGNITEEN 2025 - 2026

**Venue : Open Auditorium**

**Time : 10:30 am - 1:00 pm**
**Date : 30.06.2025**

*Welcome Address* : **Dr. (Mrs). K.LAKSHMI**
PRINCIPAL



*Special Address* : **Mr. S.SARAVANAN, IAS.**
DISTRICT COLLECTOR
Dindigul



*Motivational Session* : **Dr.(Mrs). K.NAGANANDHINI**
Associate Professor & Head
Department of Tamil



*Vote of Thanks* : **Dr.(Mrs). I.RAJESHWARI**
Associate Professor & Head
Department of Computer Science



**"ALL ARE CORDIALLY INVITED"**






# எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல்

### இரண்டாம் நாள் (01.07.2025)

## IGNITE TO INSPIRE (Motivational Speech)

இரண்டாம் நாளான இன்று (01.07.2025) பொருளியல் துறைத் தலைவர் முனைவர். இராஜலட்சுமி அவர்கள் வரவேற்புரையாற்றினார்.



கல்லூரி முதல்வர் முனைவர். க.லட்சுமி அவர்கள் தலைமை உரை ஆற்றினார்.



அதில் கதைகளின் மூலமாக திறன் மேம்பாட்டு கருத்துகளைக் கூறி மாணவிகளை உற்சாக படுத்தினார்.

இதில் முனைவர்.நிக்கோலஸ் ப்ரான்சிஸ், இயக்குனர், CAN HR அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கு கொண்டார். அவர் IGNITE TO INSPIRE என்ற தலைப்பில் உரையாற்றினார்.



அதில் மாணவிகள் வாழ்க்கை படிப்பை எவ்வாறு கற்க வேண்டும் எனவும், அவர்களின்

மனநிலையைப் பற்றியும் பலவித உதாரணங்கள் மூலம் எடுத்து கூறினார். மாணவிகளின் எண்ணங்கள் வானத்தை தொட முயற்சி செய்ய வேண்டும் எனவும், அவர்கள் எவ்வாறு தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் அழகாக எடுத்துரைத்தார்.




வாழ்க்கைக்கு தேவையான மூன்று முக்கிய வார்த்தைகளான ABC(Attitude, Belief, Commitment)-யை வேடிக்கை விளையாட்டுகளின் மூலமும், மாணவிகளிடம் கலந்துரையாடியும், கருத்துக்களை கேட்டும் புரியவைத்தார்.

இரண்டாம் நிகழ்வாக விலங்கியல் துறைத் தலைவர் முனைவர் பி.சத்தியபாமா அவர்கள், கல்லூரியின் துவக்கம், கல்லூரியில் உள்ள துறைகள், வழங்கப்படும் பாடப்பிரிவுகள் மற்றும் கல்லூரிக் கல்வி சம்பந்தப்பட்ட அனைத்து விவரங்களையும் மாணவியருக்கு மிகத் தெளிவாகவும், விரிவாகவும் எடுத்துரைத்தார்.





இறுதியில் புவியியல் துறைத்தலைவர் முனைவர். ப்ளாரன்ஸ் அன்னாள் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியை ஆங்கிலத்துறை உதவி பேராசிரியர் முனைவர்.இரா.கார்த்திகா தேவி மிக சிறப்பாக தொகுத்து வழங்கினார்.






# எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல்

**மூன்றாம் நாள் (02.07.2025)**

**உடல் நலம் மற்றும் ஆரோக்கியம்**





மூன்றாம் நாளான இன்று (02.07.2025) மாணவிகளும், பேராசிரியர்களும் ஆர்வத்துடன் பங்கேற்றனர். நிகழ்ச்சி தொடக்கமாக ஆங்கிலத் துறைத் தலைவர் கே.எம்.சுமதி அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

கல்லூரி முதல்வர் முனைவர். க.லட்சுமி அவர்கள் தலைமை உரை ஆற்றினார். அவர் நிகழ்ச்சியில் பேசும்பொது மாணவிகள் உயர் இலக்குகளை கொண்டு செயல்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக திருமதி. ப.விஜயராணி குழந்தை மேம்பாட்டு திட்ட அதிகாரி மாவட்ட சமூக நலத்துறை திண்டுக்கல் அவர்கள் வருகை தந்து சிறப்புரை வழங்கினார். அதில்



அவர் மாணவிகளின் உடல் மற்றும் மன ஆரோக்கியம் குறித்தும், சத்தான உணவுகளின் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார். மேலும் இளம் பருவ மாணவிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் அவர்கள் கல்வியில் கவனச்சிதறலை எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் என்பதை விவரித்தார்.



இரண்டாம் நிகழ்வாக கணினி அறிவியல் துறைத் தலைவர் ஐ.ராஜேஸ்வரி அவர்கள் கல்லூரியால் வழங்கப்படும் மாணவிகள் ஆதரவு அமைப்பு குறித்து விவரித்தார். அதில் கல்லூரியில் உள்ள வளாகங்களான மாணவியருக்கான ஓய்வு அறை, இளம் தாய்மாய்களுக்கான அறை, கூட்டுறவு பண்டகசாலை, உணவகம், கல்லூரி விடுதி வசதிகள், குறித்து தெளிவாக விவரித்தார்.

இந்நிகழ்ச்சியை ஆங்கிலத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர்.இரா.கார்த்திகா தேவி மிக சிறப்பாக தொகுத்து வழங்கினார்.



இறுதியில் வரலாற்றுத் துறைத் தலைவர் திருமதி. எல்.பென்சிலா அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

எம்.வி. முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல்

AFFILIATED TO MOTHER TERESA WOMEN'S UNIVERSITY, KODAIKANAL

RE-ACCREDITED WITH 'A+' GRADE BY NAAC, DINDIGUL-624001, TAMILNADU

# முதலாமாண்டு மாணவர்களுக்கான ஒரு வார கால அறிமுகப் பயிற்சித் திட்டம்

## 2025-2026 கல்வி ஆண்டு

## மூன்றாம் நாள் - 02.07.2025

| | |
|---|---|
| **வரவேற்புரை** | **திருமதி. எல். பென்சிலா,**<br>இணைப் பேராசிரியர் மற்றும்<br>துறைத் தலைவர் |
| **தலைமையுரை** | **முனைவர். திருமதி. கே.லட்சுமி,**<br>கல்லூரி முதல்வர் |
| **சிறப்புரை 1** | **திருமதி.பி.விஜயராணி,**<br>குழந்தை மேம்பாட்டு திட்ட அதிகாரி,<br>மாவட்ட சமூக நலத்துறை ,<br>திண்டுக்கல் |
| **சிறப்புரை 2** | **முனைவர்.ஐ.ராஜேஸ்வரி,**<br>இணைப் பேராசிரியர் மற்றும்<br>துறைத் தலைவர் |
| **நன்றியுரை** | **முனைவர் கே.எம்.சுமதி,**<br>இணைப் பேராசிரியர் மற்றும்<br>துறைத் தலைவர் |

**தேதி :2.7.2025** இடம் : திறந்தவெளி அரங்கம் நேரம்: கால ... மணி




# எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல்

**நான்காம் நாள் (03.07.2025)**

## போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் சாலைப்பாதுகாப்பு

நான்காம் நாளான இன்று (03.07.2025) மாணவிகளும், பேராசிரியர்களும் ஆர்வத்துடன் பங்கேற்றனர். நிகழ்ச்சி தொடக்கமாக வேதியியல் துறைப்பேராசிரியர் முனைவர். மா.தனலெட்சுமி அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர். திருமதி. க.லட்சுமி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். மாணவிகளுக்கு கல்வி, பாதுகாப்பு, மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி மாணவிகளின் எதிர்கால வளர்ச்சிக்கு வழிகாட்டினார் மேலும் போதைப்பொருட்கள் இல்லாத தமிழகத்தை உருவாக்குவோம் என்ற உறுதிமொழியினை முதல்வர் அவர்கள் சொல்ல மாணவிகள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.





திரு. தா.முருகன், துணை காவல் கண்காணிப்பாளர், மதுவிலக்கு அமலாக்கத்துறை, திண்டுக்கல் அவர்கள் மாணவிகளிடம் போதைப் பொருள் அடிமைத்தன்மையின் தீமைகள் பற்றியும், ”காவலன்” மற்றும் ”Drug Free TamilNadu” என்ற மொபைல் செயலிகளின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.



மாணவிகள் சமூகத்தில் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். அதன்பின் திரு. வெ. பழனிச்சாமி, காவல் ஆய்வாளர், நகர போக்குவரத்து காவல் நிலையம், திண்டுக்கல். அவர்கள் பாதுகாப்பான சாலை பயணம் மற்றும் போக்குவரத்து விதிகள் பற்றிய விழிப்புணர்வு உரையை வழங்கினார்.



மாணவிகள் சாலையில் பாதுகாப்பாக நடந்து கொள்ள வேண்டும் என்பதையும், சாலை பாதுகாப்பு குறித்த அடிப்படைக் அறிவை பெற வேண்டும் என்பதையும் எடுத்துரைத்தார்.



மேலும் தலை கவசம் மற்றும் சீட் பெல்ட் அணிவதன் அவசியத்தைப் பற்றி எடுத்துரைத்தார்.

அடுத்ததாக திரு.மலைச்சாமி, சார்பு ஆய்வாளர் அவர்கள் செல்போன் பயன்பாட்டின் நிறை, குறைகளை நகைச்சுவை கலந்த பேச்சின் மூலம் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

திருமதி ச.பிரபாவதி, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய உதவி இயக்குநர், TNPSC மற்றும் பிற போட்டித் தேர்வுகள் பற்றிய விளக்கத்தை வழங்கினார்.

TNPSC Group I II IV தேர்வுகள் எப்படி நடைபெறுகிறது, தயாரிக்க வேண்டிய பாடங்கள் மற்றும் இலவச வழிகாட்டல் முறைகள் குறித்து மாணவிகளுக்கு தெளிவாக எடுத்துரைத்தார்.



நிகழ்ச்சியின் இறுதியில் முனைவர். விலங்கியல் துறை உதவிப்பேராசிரியர். ப.செந்தில் இளங்கோ அவர்கள் போதை பொருள் பயன்பாட்டால் வரும் பாதிப்புகளை காணொளி மூலம் விவரித்தார். இறுதியாக ஆங்கிலத்துறை இணைப் பேராசிரியர் திருமதி. ப.ஹேமலதா அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள்.

இந்த நிகழ்ச்சி மாணவிகளுக்கு கல்வி, பாதுகாப்பு, மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திய சிறப்பான ஒரு நல்ல நிகழ்வாக

அமைந்தது. மாணவிகளின் எதிர்கால வளர்ச்சிக்கு வழிகாட்டும் வகையில் இந்த நிகழ்ச்சி மிக முக்கியமானதாக அமைந்தது என்பதில் ஐயமில்லை. மேலும் இந்நிகழ்ச்சியை தமிழ்த்துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர். திருமதி. இராஜலட்சுமி அவர்கள் தொகுத்து வழங்கினார்.






# எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல்

### ஐந்தாம் நாள் (04.07.2025)

### மனநலம், சட்டம் மற்றும் திறன் மேம்பாட்டு வளர்ச்சி

ஐந்தாம் நாள் நிகழ்ச்சி 04.07.2025 அன்று நிகழ்ச்சியின் தொடக்கமாக இயற்பியல் துறை பேராசிரியர் முனைவர் திருமதி இரா. ராஜம்மாள் அவர்கள் வரவேற்புரை வழங்கி, மாணவர்களை உற்சாகத்துடன் வரவேற்றார்.




தொடர்ந்து, கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி க. லட்சுமி அவர்கள் மாணவர்களை வாழ்த்தி, கல்விக்காலத்தின் முக்கியத்துவம், குறிக்கோள் தேடல் மற்றும் வாழ்க்கைத் திட்டங்களை

உருவாக்குவதில் இந்நிகழ்ச்சியின் பங்கு குறித்து உரையாற்றி, உற்சாகமாக ஊக்கமளித்தார்.

மனநல மருத்துவர் டாக்டர். க. மகாலட்சுமி, MBBS. DPM. ரமணா மருத்துவமனை, திண்டுக்கல் அவர்கள் மாணவிகளுக்கு மனநலம், உடல் நலம் மற்றும் சமூகப் பாதுகாப்பு குறித்து முக்கியமான உரையாற்றினார்.







முதலில், மாணவர்கள் அதிகமாக ஈடுபடும் சமூக ஊடகங்கள் (Social Media) குறித்து அவர் பேசினார். சமூக ஊடகங்களில் அதிக நேரம் செலவிடுவது மாணவர்களின் கவனச் சிதறலுக்கும், மன அழுத்தத்திற்கும் காரணமாகிறது என்பதை உணர்த்தினார். மாணவர்கள் அதிகமாக பயன்படுத்தும் செல்பேசிகள் கல்விக்கே இடையூறாக மாறுகின்றன என்பதை எடுத்துரைத்தார். நீண்ட நேரம் அலைபேசி உபயோகம் உடல்நலத்திற்கும், மனநலத்திற்கும் தீங்கு விளைவிக்கக்கூடும். குறிப்பாக தூக்கமின்மை, கண் சோர்வு, தனிமை

உணர்வு, உறவுப் பிணைப்புகளில் வெறுமை போன்றவை ஏற்படக்கூடும் என பகிர்ந்தார்.

அவர்கள் உரையில் பெண்கள் உடல் நலத்தின் அவசியம் பற்றியும். சத்தான உணவுகள், மாதவிடாய் சுகாதாரம், மன அழுத்தம் உள்ளிட்ட விஷயங்களை பற்றி கூறினார். மேலும் மனமும், உடலும் நல்ல நிலையில் இருக்க உடற்பயிற்சி மிக அவசியம் என்றும் தெரிவித்தார். தினசரி யோகா, நடைப்பயிற்சி போன்றவை மனநலம் மற்றும் உடல்நலத்த்தை வளர்ச்சியை பெறுவார்கள் என்பதையும் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கினார்.

முக்கியமான தலைப்பாக, திருமணத்திற்கு சரியான வயது குறித்து பேசினார். சமூக அழுத்தங்களுக்கோ, குடும்பத்துக்கோ இணங்காமல், ஒரு பெண் கல்வியிலும், தொழிலிலும் தன்னை நிரூபித்த பிறகே திருமணம் குறித்து யோசிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

பின்னர், சிறப்பு விருந்தினராக வந்த வழக்கறிஞர் திரு. எஸ். கோகிலா சந்தியா அவர்கள், பெண்கள் சமத்துவம் குறித்த உரிமைகள், பெண்களுக்கான சிறப்பு சட்டங்கள் மற்றும் பாலியல் தொல்லை புகார்களுக்கான இணையதள வாயில்கள் குறித்து விளக்கினார். சட்ட விழிப்புணர்வு மட்டுமல்லாது, உரிமைகள் மற்றும் பாதுகாப்பு பற்றிய ஆழ்ந்த பார்வையையும் மாணவர்களுக்கு வழங்கினார்.



அதனைத் தொடர்ந்து, மாவட்ட திறன் மேம்பாட்டு அலுவலராக பணியாற்றும் திரு. ஜே. வாஸன் பாபு அவர்கள் மாணவர்களிடம் திறன் மேம்பாடு பற்றிய மத்திய மற்றும் மாநில அரசின் திட்டங்கள், மற்றும் தொழில்முனைவோர் திட்டங்களையும் விளக்கினார். அவரது உரை மாணவர்களுக்கு பொழுதுபோக்கு மற்றும் திரைப்படக் காட்சிகள் மூலம் இனிமையாகவும் விளக்கமாகவும் அமைந்தது.




இந்நிகழ்ச்சியின் முடிவில், முனைவர் திருமதி இரா. வகிதா அவர்கள் நன்றியுரை வழங்கி, நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைத்து விருந்தினர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்ச்சியை தமிழ்த்துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர். திருமதி. இராஜலட்சுமி அவர்கள் தொகுத்து வழங்கினார்.

# எம்.வி. முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல்

AFFILIATED TO MOTHER TERESA WOMEN'S UNIVERSITY, KODAIKANAL
RE-ACCREDITED WITH 'A+' GRADE BY NAAC, DINDIGUL - 624001, TAMILNADU

# முதலாமாண்டு மாணவர்களுக்கான ஒரு வார கால அறிமுகப் பயிற்சித் திட்டம்

## 2025-2026 கல்வி ஆண்டு

## ஐந்தாம் நாள் - 04.07.2025

**வரவேற்புரை**

**முனைவர்.திருமதி. இரா.இராஜம்மாள்**
இணைப் பேராசிரியர்.

**தலைமையுரை**

**முனைவர். திருமதி.க.லட்சுமி,**
கல்லூரி முதல்வர்.

**சிறப்புரை**

**டாக்டர்.கே.மகாலட்சுமி,MBBS,DPM.,**
மனநல மருத்துவர்,
ரமணா மருத்துவமனை,
திண்டுக்கல்.

**எஸ்.கோகில சந்தியா,B.Sc,LLB,**
வழக்கறிஞர்,
உயர் நீதிமன்றம்,
மதுரை.

**திரு.ஜே.வாசன் பாபு**
உதவி இயக்குநர்
மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம்
திண்டுக்கல்

**நன்றியுரை**

**முனைவர்.திருமதி.இரா.வகிதா,**
இணைப் பேராசிரியர்.

தேதி :04.07.2025 இடம் : திறந்தவெளி அரங்கம் நேரம்: கால ... ணி




# எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல்

## ஆறாம் நாள் (07.07.2025)

### ஆளுமை வளர்ச்சி மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை

மாணவியருக்கான அறிமுக பயிற்சி திட்டத்தின் இறுதி நாள் (07.07.2025) அன்று உற்சாகமாக நடைபெற்றது. காலை நிகழ்ச்சி மாணவிகளின் ஆர்வமான பங்கேற்புடன் தொடங்கப்பட்டது. நிகழ்ச்சியின் தொடக்கமாக, பொருளியல் துறைப்பேராசிரியர். முனைவர் ப.கார்த்திகாயினி அவர்கள் இனிமையான வார்த்தைகளில் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து, கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி க.லட்சுமி அவர்கள் மாணவர்களை வாழ்த்தி, கல்விக்காலத்தின் முக்கியத்துவம், குறிக்கோள் தேடல் மற்றும் வாழ்க்கைத் திட்டங்களை உருவாக்குவதில் இந்நிகழ்ச்சியின் பங்கு குறித்து உரையாற்றி, உற்சாகமாக ஊக்கமளித்தார்.






தமிழ்த்துறைத் தலைவர். முனைவர் நாகநந்தினி அவர்கள் சிறப்புரை வழங்கினார். மாணவியர்கள் எவ்வாறு தங்களின் திறமைகளை வெளிக்கொணர வேண்டும், தன்னம்பிக்கையுடன் வளர வேண்டும் என ஊக்கமளித்தார்.

முதல் அமர்வில், தலைமை விருந்தினராக வந்த முன்னாள் முதல்வர் அரசு கலைக் கல்லூரி, கொடைக்கானல், திருமதி எஸ். எஞ்சலின் அவர்கள் ”சிறந்த ஆளுமை வளர்ச்சி” குறித்த முக்கியமான கருத்துகளை விவரித்தார். உடல் நலன் (Physically Fit), மனநலன் (Mentally Sound), உணர்ச்சி கட்டுப்பாடு (Emotionally Mature) ஆன்மிக ஆற்றல் (Spiritually Strong), நேர்மையான நெறிகள் (Morally Upright) போன்ற முக்கிய அம்சங்களை விளக்கினார். இந்தக் கூறுகள் ஒருவரின் ஆளுமையை உருவாக்கும் முக்கியமான பரிமாணங்களாக இருப்பதையும், மாணவியர்கள் அவற்றை தங்களுள் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.




பின்னர், இரண்டாவது தலைமை விருந்தினர் திருமதி ஜி. ஜான்சி ராணி அவர்கள் திட்ட இயக்குனர் (சமூக நலத்துறை மற்றும் மகளிர் உரிமைத்துறை), பெண்கள்

எதிர்கொள்கின்ற முக்கியமான சமூக பிரச்சனைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினார்: குழந்தை திருமணம், இளம் வயது கர்ப்பம், கட்டாய திருமணங்கள், வரதட்சனை கொடுமை சூழல்களை எதிர்கொள்ளும் வழிமுறைகள், சட்டங்கள் மற்றும் ஆதரவுகள் குறித்தும் தெளிவாக எடுத்துரைத்தார்.



நிகழ்ச்சியின் முடிவில், விலங்கியல் துறைப்பேராசிரியர் டாக்டர் ஈதல் பாலின் அவர்கள் நிகழ்ச்சியை சிறப்பிக்க வந்த அனைத்து விருந்தினர்களுக்கும், திட்டம் முழுக்க ஏற்பாடு செய்த குழுவினருக்கும், மாணவிகளுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.





மேலும் நிகழ்ச்சியை தமிழ்த்துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர். திருமதி. இராஜலட்சுமி அவர்கள் தொகுத்து வழங்கினார்.இவ்வாறு, 2025-2026 கல்வியாண்டிற்கான அறிமுகப்பயிற்சித் திட்டத்தின் இறுதி நாள் மிகச் சிறப்பாகவும், பயனுள்ளதாகவும் நடைபெற்றது. மாணவிகள் தங்களின் எதிர்கால கல்வி பயணத்திற்கு இது ஒரு தொடக்கமாக அமைந்தது என்பதில் ஐயமில்லை. இந்த ஒரு வார கால அறிமுக பயிற்சியினை IQAC ஒருங்கிணைப்பாளர் கணினி அறிவியல் துறையின் இணைப்பேராசிரியர் முனைவர். சீ.கிருஷ்ணவேணி அவர்கள் ஒருங்கிணைத்தார்.






எம்.வி. முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல்
AFFILIATED TO MOTHER TERESA WOMEN'S UNIVERSITY, KODAIKANAL
RE-ACCREDITED WITH 'A+' GRADE BY NAAC, DINDIGUL -624001, TAMILNADU
முதலாமாண்டு மாணவர்களுக்கான
ஒரு வார கால அறிமுகப் பயிற்சித் திட்டம்
2025-2026 கல்வி ஆண்டு
ஆறாம் நாள்- 07.07.2025
வரவேற்புரை
முனைவர்.ப.கார்த்தியாயினி,
இணைப் பேராசிரியர்,
பொருளியல் துறை.
தலைமையுரை
முனைவர். திருமதி.க.லட்சுமி,
கல்லூரி முதல்வர்.
சிறப்புரை
முனைவர்.திருமதி.எஸ்.ஏஞ்சலின்,
முன்னாள் முதல்வர்,
அரசு கலைக் கல்லூரி,
கொடைக்கானல்.
திருமதி.ஜி.ஜான்சி ராணி,
மைய நிர்வாகி,
சமூக நலன் மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல்
திண்டுக்கல்.
முனைவர்.திருமதி.வெ.ராஜலட்சுமி
இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர்
பொருளியல் துறை.
கலை நிகழ்ச்சிகள்
நன்றியுரை
முனைவர்.திருமதி.மா.ஈதெல் பாலின்
இணைப் பேராசிரியர்,
விலங்கியல் துறை.
தேதி :07.07.2025
இடம் : திறந்தவெளி அரங்கம்
நேரம்: கால

**FEED-BACK ANALYSIS - (2025-2026)**





1) **Have you received the complete information about the Administrative Structure, Programmes and Department?**

2) **Have you received the complete information about the Curriculum, Examination and Evaluation pattern?**

3) **Have you received the complete information about the Student Support Systems (Hostels/Cooperative Stores/Canteen/Xeroxing facilities, Girls Resting room, First Aid support, etc.)?**

4) **Have you received the complete information about the Anti-Ragging , Anti Sexual harassment, ICC, Anti-drug awareness(Videos)**

5) **Have you received the complete information about the Extension activities & Service Cells / Clubs (NSS, YRC, RRC, Enviro. club, Women Development Cell, Entrepreneurial Cell, Student Counselling Cell, Science Forum, Fine Arts, Departmental Clubs, etc.)**




1) **How would you rate the Ice Breaking and Interactive Session?**

2) **Evaluate the speech delivered by District collector Mr.S.Saravanan IAS (Day1)**
3) **Evaluate the speech delivered by Mr. Nicholas Francis(Director CAN HR) - Motivational speech (Day 2)**
4) **Evaluate the speech delivered by Mrs.P.Vijayarani (District Social Welfare Officer) - Government Schemes Benefiting Students (Day3)**
5) **Evaluate the speech delivered by Mr.S.Jaganathan Social Welfare Officer - Government Schemes Benefiting Students (Day 3)**
6) **Evaluate the speech delivered by Mr.D.Murugan SP/ASP - Students Safety drive & Societal Responsibilities ( Day 4)**
7) **Evaluate the speech delivered by Mr.V.Palanichamy(Inspector)- Safety rules and regulations (Day4)**
8) **Evaluate the speech delivered by Ms.S.Prabavathy( District Employment Officer)- Career Guidance & Placement (Day4)**
9) **Evaluate the speech delivered by Dr.K.Mahalakshmi (Psychologist)-Health and Hygiene, Student Well-being (Day 5)**
10) **Evaluate the speech delivered by Ms.S.Kogila Sandhiya( Advocate)-Women Rights (Day 5)**
11) **Evaluate the speech delivered by Mr. J.Vasan Babu (Tamilnadu Skill Development Centre )- Skill development( Day 5)**
12) **Evaluate the speech delivered by Ms.Kamatchi(Lawyer)- Human Rights(Day 5)**
13) **Evaluate the speech delivered by Dr. S. Angelin(Former Principal) -Writing Skills and Content Writing ( Day 6)**
14) **Evaluate the speech delivered by Mrs.G.Jansi Rani(Social Welfare and Women Empowerment)- Psychological Counselling ( Day 6)**